செய்தி வெளியீடு 388 26.6.2007

## செய்தி வெளியீடு

## சென்னையில் மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் கிளை செயலகத்திற்கான தலைமை அலுவலகம்

## மதுரையிலும், கோவையிலும் புதிய பாஸ்போர்ட் அலுவலகங்கள்

## முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை ஏற்று மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி கடிதம்

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் கிளை செயலகத்திற்கான தலைமை அலுவலகம் சென்னையில் அமைக்கப்படவேண்டும் என்றும், மதுரை, கோவை ஆகிய இடங்களில் பாஸ்போர்ட் அலுவலகங்கள் புதிதாக ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மத்திய அரசுக்கு 9.6.2007 அன்று கடிதம் எழுதி வலியுறுத்தியிருந்தார்.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இக்கோரிக்கைகளை ஏற்று, 15.6.2007 அன்று கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் கிளைச் செயலகத்திற்கான தலைமை அலுவலகம் சென்னையில் உள்ள தமிழ்நாடு பாடநூல் கழகக் கட்டடத்தில் வரும் ஆகஸ்டு மாத ஆரம்பத்தில் தொடங்கப்படும் என்றும், மதுரையில் புதிய பாஸ்போர்ட் அலுவலகம் அமைக்கப்படுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அவ்வலுவலகம் செயல்படத் தொடங்கும் என்றும்,

கோவையில் புதிய பாஸ்போர்ட் அலுவலகம் அமைப்பதற்காக, அங்கு அவினாசி சாலையில் உள்ள மாநகராட்சி அலுவலகப் பகுதியில் உள்ள கட்டடம் தேர்வு செய்யப்பட்டு, புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருவதாகவும், பணிகள் முடிவடைந்த பிறகு 2007 ஆம் ஆண்டு இறுதியில் கோவையில் புதிய பாஸ்போர்ட் அலுவலகம் செயல்படத் தொடங்கும் என்றும், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி, முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.